டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 21.8.2024 புதன்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 053- Madurai | Online Edition

# 1031 லட்சம் ஹெக்டேருக்கும் அதிக பரப்பில் காரீப் பருவ பயிர் சாகுபடி

புது தில்லி, ஆக.20

கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் 349.49 லட்சம் ஹெக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டு 369.05 லட்சம் ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் 113.69 லட்சம் ஹெக்டேர் பரப்பில் பருப்பு வகைகள் சாகுபடி செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டு 120.18 லட்சம் ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப் பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் 176.39 லட்சம் ஹெக்டேர் பரப்பில் மானாவாரி பயறு வகைகள் சாகுபடி செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டு 181.11 லட்சம் ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் 185.13 லட்சம் ஹெக்டேர் பரப்பில் எண்ணெய் வித்துகள் சாகுபடி செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டு 186.77 லட்சம் ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப் பட்டுள்ளது.

2024 ஆகஸ்ட் 20-ம் தேதி நிலவரப்படி காரீப் பருவத்தில் மேற்கொள்ளப்பட்ட சாகுபடியின் முன்னேற்றம் குறித்த விவரத்தை மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை வெளியிட்டு உள்ளது.



பரப்பு : லட்சம் ஹெக்டேரில்

| வ. எண் | பயிர் விவரம் | சாகுபடி பரப்பு 2024 | சாகுபடி பரப்பு 2023 |
|---|---|---|---|
| 1 | நெல் | 369.05 | 349.49 |
| 2 | பருப்பு | 120.18 | 113.69 |
| a | துவரம் பருப்பு | 45.78 | 40.74 |
| b | உளுந்து | 28.33 | 29.52 |
| c | பச்சை பயிறு | 33.24 | 30.27 |
| d | குதிரைவாலி* | 0.20 | 0.24 |
| e | தட்டைப் பயிறு | 8.95 | 9.28 |
| f | இதர பருப்பு வகைகள் | 3.67 | 3.63 |
| 3 | சிறுதானியங்கள் & மானாவாரி பயிறு | 181.11 | 176.39 |
| a | சோளம் | 14.62 | 13.75 |
| b | கம்பு | 66.91 | 69.70 |
| c | கேழ்வரகு | 7.56 | 7.04 |
| d | சிறுதானியங்கள் | 4.79 | 4.66 |
| e | மக்காச்சோளம் | 87.23 | 81.25 |
| 4 | எண்ணெய் வித்துகள் | 186.77 | 185.13 |
| a | நிலக்கடலை | 46.36 | 42.61 |
| b | சோயாபீன்ஸ் | 125.11 | 123.85 |
| c | சூரியகாந்தி | 0.70 | 0.65 |
| d | எள்** | 10.55 | 11.35 |
| e | பேய் எள் | 0.27 | 0.24 |
| f | ஆமணக்கு | 3.74 | 6.38 |
| g | இதர எண்ணெய் வித்துகள் | 0.04 | 0.05 |
| 5 | கரும்பு | 57.68 | 57.11 |
| 6 | சணல் & புளிச்சகீரை | 5.70 | 6.56 |
| 7 | பருத்தி | 111.07 | 122.15 |
| | **மொத்தம்** | **1031.56** | **1010.52** |

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# துவரை நாற்று நடவு செயல்விளக்க திடல் ஆய்வு



சேலம், ஆக.20

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரத்தில் கடத்தூர் அக்ரஹாரம் கிராமத்தில் முன்னோடி விவசாயி பேபி வயலில் தேசிய உணவு மற்றும் மற்றும் ஊட்டசத்து இயக்கம் சார்பில் அமைக்கப்பட்ட துவரை வரிசை நடவு செயல்விளக்கம், பூபதி வயலில் அமைக்கப்பட்ட தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் சார்பில் அமைக்கப்பட்ட காலநிலை மாறுதளுக்குகேற்ற துவரை நாற்று நடவு செயல்விளக்கத்தை வேளாண் துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) சீ.நாகராஜன் பார்வையிட்டு உயரிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அதிக மகசூல் எடுக்க விவசாயிகளை கேட்டுக்கொண்டார்.

முதலமைச்சரின் மன்னுயிர் காத்து மண்ணுயிர் காப்போம் திட்டத்தில் வேம்பு மரக்கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்கி பேசும் பொது மரக்கன்றுகளை நன்கு பராமரித்து மண்வளத்தை காக்க கேட்டு கொண்டார். வேளாண் விரிவாக்க மையத்தில் இடுபொருள் இருப்பு விவரங்கள் சரியாக உள்ளதா என்று ஆய்வு மேற்கொண்டார். மேலும் அனைத்து திட்ட பதிவேடுகளை உரிய முறையில் பராமரிக்க அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வில் தேசிய உணவு பாதுகாப்பு திட்ட மாவட்ட ஆலோசகர் தி.பிரேம்குமார், வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி, துணை வேளாண்மை அலுவலர் பி.கிருஷ்ணமூர்த்தி, உதவி வேளாண்மை அலுவலர் ஆ.குமார் மற்றும் ம.தினேஷ், அட்மா திட்ட அலுவலர்கள் கே.ராஜேந்திரன் மற்றும் தீபன் முத்துசாமி உடன் இருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி



சிவகங்கை, ஆக.20

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டாரம், வேளாண்மைத் துறை சார்பாக பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயனடைந்த விவசாயி களுக்கு 16.8.24 அன்று கோட்டையூர் கிராமத்தில் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் இளையான்குடி வேளாண்மை உதவி இயக்குநர் தங்கபாண்டியன் தலைமையேற்று பயிற்சியில் கலந்து கொண்ட விசாயிகளுக்கு அங்கக பண்ணைகள் சார்ந்த தொழில் நுட்பங்கள் பயன்கள் மற்றும் முக்கியத்துவங்கள் பற்றி எடுத்துக் கூறினார். மேலும் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் பாஸ்போபாக்டீரியா மற்றும் பொட்டாஷ் பயன்பாடுகள் எடுத்துக்கூறினார்.

மேலும் சிவகங்கை விதைச்சான்றளிப்புத் துறை ம.சரஸ்வதி (உயிர்ம சான்றளிப்பு ஆய்வாளர்) பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு விவசாயிகள் அங்கக முறையில் விவசாயம் செய்தல் மற்றும் இடுபொருட்கள் தயாரித்தல் சம்பந்தமாக (PGS-Participatory Guarentee System) உயிர்ம சான்றிதழ் பெறுவது குறித்து விரிவான முறையில் எடுத்துக் கூறினார்.

இப்பயிற்சியில் இளையான்குடி துணை வேளாண்மை அலுவலர் நடேசகுமார், வேளாண்மைத் துறையில் நடப்பாண்டில் செயல்படுத்தி வரும் திட்டங்களான மத்திய மற்றும் மாநில திட்டங்கள் மற்றும் விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார். பயிற்சியில் கலந்து கொண்டு அங்கக முறையில் சாகுபடி செய்து வரும் விவசாயிகள் மற்ற விவசாயிகளுக்கு அங்கக இடுபொருட்கள் தயாரித்து செயல்விளக்கம் செய்து காண்பித்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை தொகுப்பு ஒருங்கிணைப்பாளர் லாரா மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர். பயிற்சியில் கலந்து கொண்ட உயர் அலுவலர்களுக்கும் விவசாயிகளுக்கும் உதவி வேளாண்மை அலுவலர் சோபனா நன்றியுரை கூறி இப்பயிற்சியினை நிறைவு செய்தார்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | 20.08.2024 | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 22 | 26 | 56 | காளான் (சிப்பிபட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 28 | 32 | 57 | உருளை (கோலார்) | 36 | 42 |
| 1B | கத்திரி(Nadu) | 50 | 56 | 57A | உருளை(ஊட்டி) | 60 | 66 |
| 2 | வெண்டை | 20 | 24 | 58 | மேரக்காய் | 20 | 22 |
| 3 | தக்காளி (நாடு) | 14 | 18 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 35 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 14 | 18 | 60 | கேரட் | 85 | 90 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 30 | 36 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 48 | 52 |
| 6 | புடலை | 25 | 30 | 62 | நூல்கோல் | 50 | 58 |
| 7 | பீர்க்கன் | 20 | 25 | 63 | டர்னிப் | 30 | 36 |
| 8 | சுரைக்காய் | 22 | 26 | 64 | மு.கோஸ் | 30 | 36 |
| 9 | பாகற்காய் | 28 | 32 | 65 | மு.கோஸ்(கலர்) | 40 | 45 |
| 10 | கொத்தவரை | 25 | 30 | 66 | காளிபிளவர் | 42 | 48 |
| 11 | பூசணி | 28 | 32 | 67 | பட்டாணி | | |
| 12 | அரசாணி | 20 | 24 | 68 | பூண்டு | 190 | 280 |
| 13 | ப மிளகாய்(சம்பா) | 50 | 56 | 69 | இஞ்சி | 60 | 128 |
| 14 | ப மிளகாய்(Bullet/Nadu) | 50 | 56 | 70 | புருக்கோலின் | 180 | 200 |
| 15 | சி.வெங்காயம் | 35 | 40 | 71 | பெண்ணி பீன்ஸ் | 55 | 60 |
| 16 | பெ.வெங்காயம் | 40 | 43 | 72 | குடமிளகாய் | 48 | 58 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 25 | 28 | 73 | ஊட்டி அவரை | | |
| 18 | பச்சை மொச்சை | 30 | 36 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | 35 | 38 | 71A | | | |
| 20 | தேங்காய் | 30 | 34 | | | | |
| 21 | மாங்காய் | | | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 45 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 65 | 68 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 0 | 0 | 75 | எலுமிச்சை | 110 | 120 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா | 45 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 30 | 35 |
| 28 | கறிவேப்பிலை | 30 | 34 | 79 | மாதுளை | 150 | 200 |
| 29 | கொத்தமல்லி | 35 | 40 | 80 | திராட்சை | 110 | 120 |
| 30 | புதினா | 8 | 10 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 40 | 45 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 25 | 30 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 35 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசனி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | 30 | 32 |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 85 | 90 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 50 | 55 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 30 | 34 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 28 | 32 | 96 | நேந்திரன் | 65 | 70 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 30 | 97 | செவ்வாழை | 85 | 90 |
| 47 | கண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 65 | 68 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | புளி | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 40 | 45 | 104 | நாவல் | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 25 | 28 | | | | |

# வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் மண் வள மேலாண்மை பயிற்சி



ஈரோடு, ஆக.20

ஈரோடு மாவட்டம், பவானி வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை கீழ் செயல்படும் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகளுக்கு மண் வள மேலாண்மை பயிற்சி நடைபெற்றது.

இது குறித்து பவானி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ம.கனிமொழி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, பவானி வட்டாரம், வேளாண்மைத்துறை கீழ் செயல்படும் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படும் புன்னம் வருவாய் கிராமத்தில் உழவர்களுக்கு மண்வள மேலாண்மை பயிற்சி நடைப்பெற்றது.

இந்த விவசாயிகள் பயிற்சியில் சோபன்சக்கரவர்த்தி, குமரகுரு வேளாண்மை கல்லூரி, ஆப்பகூடல் மண்பரிசோதனை செய்வதன் மூலம் ஏற்படும் நன்மைகள் , பலதானிய விதைப்பு துறைகள், மண்புழு உர தயாரிப்பு முறை அதன் நன்மைகள் குறித்து எடுத்துக்கூறினார். வேளாண்மை அலுவலர், மண் பரிசோதனை நிலையம் , ஈரோடு ஜமுனா மண் பரிசோதனை செய்து அதன் அடிப்படையில் உர மேலாண்மை மேற்கொள்வதன் நன்மைகளை தெளிவாக எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர், நடமாடும் மண்பரிசோதனை நிலையம், ஈரோடு கே.சுலோசனா நடமாடும் மண்பரிசோதனை பேருந்து மூலம் மண் பரிசோதனை செய்து காண்பித்தார். தர்மராஜ் ,வேளாண்மை உதவி அலுவலர், வேளாண்மைத்துறை சார்ந்த மானியத் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். பவானி வட்டார தொழில்நுட்ப மேலாளர் லோ.கங்கா உழவன் செயலிபதிவேற்றம், இ நாம் மற்றும் இ வாடகை குறித்து விவசாயிகளிடம் கூறினார். பவானி உதவி தொழில்நுட்ப மேலாளர் மணிகண்டன் மற்றும் பூங்கோதை, உயிர் உரங்கள் மற்றும் அதன் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு தெரிவித்தார்.

# சான்று பெற்ற விதைகள் பயன்பாடு மற்றும் விதை நேர்த்தி பயறு வகை பயிர்களில் உற்பத்தியை மேம்படுத்தும் தொழில்நுட்பங்கள் விவசாயிகள் பயிற்சி

இராமநாதபுரம், ஆக.20

இராமநாதபுரம் வட்டாரம் உழவர் மையத்தில் கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் சான்று பெற்ற விதைகள் பயன்பாடு



மற்றும் விதைநேர்த்தி பயறு வகை பயிர்களில் உற்பத்தியை மேம்படுத்தும் தொழில்நுட்பங்கள் விவசாயிகள் பயிற்சி நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் வரவேற்புரை ஆற்றிய இராமநாதபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மா.கோபாலகிருஷ்ணன் வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள், மானிய விபரங்களை உழவன் செயலி மூலம் பதிவு செய்தல் விபரங்கள் மற்றும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல் படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் அவற்றின் மானிய விபரங்கள் குறித்தும் மற்றும் சான்று பெற்ற விதைகள் பயன்பாடு மற்றும் விதை நேர்த்தி பயறு வகை பயிர்களில் உற்பத்தியை மேம்படுத்தும் தொழில் நுட்பங்கள் பற்றி அவற்றின் நன்மைகள் பற்றி விவசாயிகளிடம் விரிவாக எ டுத்துரைத்தார்.

இராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (ம.தி) னி.ம்.பாஸ்கரமணியன் பயறுவகை பயிர்களில் விதை நேர்த்தி செய்யும் முறைகள் மற்றும் பசுந்தாள் உரப்பயிர்கள் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி விவசாயிகளுக்கு தெரிவித்தார்.

இராமநாதபுரம் மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் வேளாண்மை துணை இயக்குநர் K.P.முருகேசன் மண்பரிசோதனை செய்தவதின் முக்கியத்துவம் மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடுகள் மற்றும் ஊட்டமேற்றிய தொழுஉரம் பயன்படுத்துவதின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டவேளாண்மை துணைஇயக்குநர் (மா.தி) M.K.அமர்லால் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பசுந்தாள் உர விதைகள் 50 சதவித மானியத்தில் வழங்கப்படுகிறது என்று விவசாயிகளுக்கு தெரிவித்தார். மண் பரிசோதனை செய்தவதின் முக்கியத்துவம் மற்றும் உயி உரங்களின் பயன்பாடுகள் மற்றும் ஊட்டமேற்றிய தொழுஉரம் பயன்படுத்துவதின் முக்கியத்துவம் குறித்து விவசாயி களுக்கு எடுத்துரைத்தார்.

இராமநாதரபுரம் மாவட்ட விதைச்சான்றளிப்புதுறை மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை உதவி இயக்குநர் சி.சிவகாமி சான்று பெற்ற விதைகள் பயன்பாடு மற்றும் விதைநேர்த்தி பயறுவகை பயிர்களில் உற்பத்தியை மேம்படுத்தும் தொழில் நுட்பங்கள் பற்றியும் அவற்றின் நன்மைகள் பற்றி விவசாயிகளிடம் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் விவசாயிகளிடம் உயிர்மப் பண்ணையம் பற்றி விளக்கமாக கூறினார்.

இராமநாதபுரம் வட்டார வேளாண்மை விரிவாக்க மைய வேளாண்மைஅலுவலர் ந.தமிழ் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் உள்ள மானியங்கள் மற்றும் உரப்பரிந்துரை பற்றி விவசாயிகளிடம் கூறினார். மேலும் விவசாயிகள் அனைவரும் உழவன் செயலியின் பயன்பாடுகள் பற்றி விவசாயிகளிடம் எடுத்துரைத்தார்.மற்றும் மண் மாதிரிகள் சேகரித்தல் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி விவசாயிகளிடம் கூறினார்.

இப்பயிற்சியில் இராமநாதபுரம் வட்டாரத்திலிருந்து 40 விவசாயிகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை இராமநாதபுரம் உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் இராமநாதபுரம் வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர் த.இராஜேஸ் குமார் ஆகியோர் செய்திருந்தனர். பயிற்சியின் நிறைவாக இராமநாதபுரம் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ப.கோசலாதேவி நன்றியுரை கூறினார்.




# நெல் உழவர் வயல்வெளிப்பள்ளி நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் மாணவிகள்



திண்டுக்கல், ஆக.20

திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில், இளநிலை வேளாண்மை பயிலும் இறுதியாண்டு மாணவிகள் விஸ்வப்பிரியா, முத்துஸ்ரீ அபிராமி, விசாலினி, அப்ஸானா சஃப்ரீன் ஆகியோர் தேனி அருகே உத்தமபாளையம் பகுதியில் நடைபெற்ற நெல் உழவர் வயல்வெளிப்பள்ளியில் விவசாயிகளை சந்தித்தனர். அதில் நெல் விவசாயிகளுக்கு இலைவண்ண அட்டை மற்றும் முதுகேற்ற கைத்தெளிப்பான் பற்றி செயல்முறை விளக்கமளித்தனர்.

# தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில்

# பார்த்தீனியம் மேலாண்மை – விழிப்புணர்வு முகாம்



கோயம்புத்தூர், ஆக.20

ஒன்றிய அரசின் களை ஆராய்ச்சி இயக்குநகரத்தின் கீழ் செயல்படும் ஒருங்கிணைந்த களை மேலாண்மைத் திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 16 முதல் 22 ம்தேதி வரை பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரமாக அனுசரிக்கப்படுகிறது. அதன்படி தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் களை மேலாண்மை பிரிவின் கீழ் விவசாயிகள், பண்ணைத் தொழிலாளர்கள், சுகாதார பணியாளர்கள் போன்ற பல்வேறு தரப்பினருக்கும் பார்த்தீனியம் பற்றிய விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.

இந்த விழிப்புணர்வு முகாம்களின் தொடக்க நிகழ்வாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கிழக்குப் பண்ணை மற்றும் மத்தியப் பண்ணையில் பணிபுரியும் அனைத்து பண்ணைத் தொழிலாளர்களுக்கும் பார்த்தீனியம் களை மேலாண்மை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் உழவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ப.பரசுராமன் முன்னிலையேற்று பார்த்தீனியம் மேலாண்மை பற்றி சிறப்புரையாற்றினார்.

இந்த விழிப்புணர்வு முகாம்களில் பார்த்தீனியம் களைச் செடி பற்றியும் அதன் நச்சுத்தன்மையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தும் முறைகளான உழவியல், இரசாயன மற்றும் உயிரியல் முறைகள் பற்றியும் தெரிவிக்கப்பட்டு அதனை சிறந்த முறையில் கட்டுப்படுத்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், பார்த்தீனியச் செடிகளைப் பூக்கும் முன் பிடுங்கி உரமாக்குதல் பற்றியும் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. ஆகஸ்ட் 16 முதல் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட முகாம்களில் பேராசிரியர் மற்றும் களை மேலாண்மை பிரிவின் முதன்மை விஞ்ஞானி முனைவர் செ.ராதாமணி, இணைப் பேராசிரியர் முனைவர் ச.பாரதி ஆகியோர் பங்கேற்று இந்த நிகழ்ச்சியை சிறப்புற நடத்தினர்.

# பயிரின் வளர்ச்சியில் சுண்ணாம்பு சத்துகளின் பங்கு!

பயிர்களின் மகசூலை தீர்மானிப்பதில் சுண்ணாம்பு சத்தின் (CALCIUM) பங்கு முக்கியமாக உள்ளது. பயிருக்கு பேரூட்ட சத்துகளின் தேவைக்கு (NPK) அடுத்தப்படியாக இரண்டாம் நிலை ஊட்டசத்துகளில் (CMS) சுண்ணாம்பு சத்து உள்ளது. பயிருக்கு சுண்ணாம்பு அவசியம் அதே நேரத்தில் அளவாக இருக்க வேண்டும். வெற்றிலைக்கு சுண்ணாம்பு எப்படியோ அதை போலத் தான் பயிருக்கு. மண்ணில் சுண்ணம்பு அதிகமானால், மண் புரை யோடி பயிர்களின் வளர்ச்சி தடைபடும்.


ARJUN® TARPAULINS SINCE 1989

Always the Best
ARJUN® TARPAULINS



• PVC Coated/HDPE Tarpaulins • Poultry Curtains • Pond Liners
• Tents • Cars/scooter Covers • Shade Nets
• Azolla Beds • Vermi Beds

ARJUN TARPAULIN INDUSTRIES
EXPERTS WHO KNOW TARPAULINS BEST
Contact us : 94422 12345, 94861 12345
www.arjuntarpaulins.com info.arjun@gmail.com
Arjun Towers, 47, Rajaji Road, Near Hotel Windsor Castle, Salem - 636007, Tamil Nadu, South India

கால்சியம் கார்பனேட் எனப்படும் இந்த சுண்ணாம்பு சத்து மண்ணில் சரியான அளவிற்கு இருக்கிறதா? என்பதை கண்டறிய ஒரு எளிய தோதனை உள்ளது.

**அது என்ன என்பதை பார்ப்போம்?**

நிலத்து மண்ணை கொஞ்சம் போல எடுத்துக்கொண்டு 10% ஹைட்ரோ குளோரிக் அமில (HCL) த்தை அதில் ஊற்ற வேண்டும். மண் பொங்கி கொண்டு வந்தால் மண்ணில் சுண்ணாம்புத் தன்மை அதிகமாக இருக்கிறது எனவும் சுமாராக நுரைத்தால் நடுத்தர நிலையில் உள்ளது என்பதை தெரிந்து கொள்ளலாம்.

**சுண்ணாம்பு மண்ணின் தன்மை?**

இந்த மண் பெரும்பாலான வறண்ட பகுதியிலும், கருப்பு கலந்த மண்ணில் அதுவும் எங்கு எங்கு சிமெண்ட் ஆலை உள்ளதோ அப்பகுதியில் 30 கிமி சுற்றளவு உள்ள பகுதியில் காணப்படும்.இது டோலமைட், ஜிப்சம், சூப்பர் பாஸ்பேட், ராக் பாஸ்பேட் போன்றவை சுண்ணாம்பு சத்தின் மூலகங்களாக உள்ளது. இதனை (CALCAREOUS SOIL) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றன.

**பயிரின் வளர்ச்சியில் சுண்ணாம்பின் பங்கு?**

பயிர் நன்றாக வளர்ச்சியை அடையவும், செல் சுவற்றின் அமைப்புகள் உருவாகிட சுண்ணாம்பு சத்து அவசியம். உயிரணுக்களின் வேறுபாட்டை செயல்பாடுகளை ஒழுங்குப் படுத்தவும் பயிரின் செயல்பாடுகளை கடத்தும் காரணியாகவும் உள்ளதால் இது சத்துகளின் ராஜா' என்று அழைக்கப்படுகின்றன. சுண்ணாம்பு சத்து சரியான அளவில் இருந்தால் மண் பொல பொலப்பாக இருக்கும்.

**பற்றாக்குறை அறிகுறிகள்?**

இளம் இலைகள் அளவில் வழக்கத்திற்கும் மாறாக காட்சியளிக்கும். இலையின் விளிம்புகள் காய்ந்து நீண்டு கூர்மையாக காணப்படும். அதாவது இலைபரப்பு உருமாறிக் காணப்படும். இது புதியதாக நட்ட திசு வளர்ப்பு கன்றுகளில் காணப்படும். வாழைக்குலையின் தரம் குறைந்து தக்காளி போன்ற பழங்களில் தோலில் வெடிப்புகள் தோற்றுவிக்கும்.

**பற்றாக்குறையை நிவர்த்தி செய்வது எப்படி?**

சுண்ணாம்பு தன்மை அதிகமாக இருக்கும் நிலங்களில், காரத்தன்மை உண்டாகாத உரங்களை இட வேண்டும். இதற்கு தழைசத்து அதிகமாக உள்ள உரங்களே இடலாம். அதிகமாக தொழு உரம் உயிர் உரங்கள் கலந்து இடலாம். நீர் நீக்க பட்ட சுண்ணாமாபினை 50 கிராம் / ஒரு மரத்திற்கு இடலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# விவசாயிகளுக்கு காயர் பித் கம்போஸ்ட் உர தயாரிப்பு செயல் விளக்கம்





திண்டுக்கல், ஆக.20

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரமோகன், ஆலோசனைப்படி உதவி தோட்டக் கலை அலுவலர் சக்திவேல் முன்னிலையில் எம் எஸ் சுவாமி நாதன் ஆராய்ச்சி நிலைய முதுநிலை ஆராய்ச்சியாளர் டாக்டர் செல்வமுகிலன், காயர் பித் கம்போஸ்ட் உர தாயாரிப்பு முறை பற்றி செயல் விளக்கத்தினை பன்றிமலை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். காயர் பித் கம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்கு 500 கிலோ காயர் பித் தூள் 5 கிலோ புளூரட்டஸ் காளான் வேஸ்ட் 5 கிலோ யூரியா எடுத்துக்கொண்டு தரையில் பாலீத்தீன் பாய் மேல் 100 கிலோ அளவிற்கு காயர்பித்தை தூவி அதன்மேல் 2 கிலோ புளூரட்டஸ் துவ வேண்டும். அதன் மேல் 2 கிலோ யூரியாவை தூவி அதன் மேல் இலைகளை போட்டு மீண்டும் 100 கிலோ காயர்பித்தை பரப்வி அதன் மேல் 2 கிலோ புளூரட்டஸ் துவி அதன்மேல் ரெண்டு கிலோ யூரியாவை தூவி அதன் மேல் காயர்பித்தை தூவி அதன்மேல் மீதம் உள்ள புளூரட்டஸ் போட்டு அதன் மேல் மீதம் உள்ள யூரியாவை போட்டு அதன் மேல் இலை தலை களை அதன் மேல் மீண்டும் அடுக்கடுக்காக பரப்பி தினமும் அதன் மேல் தண்ணீர் தெளித்து வர வேண்டும். தண்ணீர் இறங்க இறங்க காயர் பித் நன்றாக கம்போஸ்ட் உரமாக நமக்கு 40 நாட்களில் கிடைக்கும். இதனை களை எடுத்து பார் கட்டும் போது மண் அனைகும் போது குளித்தட்டுகளில் நாற்றுகள் பாவி பயன்படுத்துவதற்கு வாய்க்கால்கள் தூவி விட்டு வரப்பு கட்டுவதற்கு பயன்படுகிறது. இச்செயல் விளக்கத்தில் பன்றிமலை முன்னோடி விவசாயி சிவா தோட்டத்தில் சுமார் 40 விவசாயிகள் முன்னிலையில் தயாரிப்பு பற்றி செயல் விளக்கமாக செய்து காண்பிக்கப்பட்டது.

இவ்செயல்விளக்கத்தில் வட்டார மேலாளர் சுகன்யா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் உடன் இருந்து சிறப்பாக செய்து காண்பித்தனர்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# கம்பு சாகுபடி முறைகள் மற்றும் விதை உற்பத்தி முறைகள்



கம்பு சாகுபடி முறைகள், விதை உற்பத்தி குறித்து கடலூர் மாவட்ட விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் சே.விஜயா வெளியிட்டுள்ள தொழில்நுட்ப செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் நெல், கோதுமை, சோளத்துக்கு அடுத்ததாக பயிரிடப்படும் உணவு பயிர், கம்பு. கம்பு குறைந்த நீர் வளம், மண் வளம் உள்ள இடங்களிலும் செழித்து வளரக்கூடியது. உணவுத் தன்மையிலும் மற்ற தானியங்களை விட அதிகமான சத்துப் பொருள்களை பெற்றுள்ளது. கம்பு தானியமாக மட்டுமல்லாமல் சிறந்த கால்நடைத் தீவனமாகவும் உள்ளது. அரிசியை மட்டுமே உண்பதால் வரும் சத்துக்குறைபாட்டைப் போக்க கம்பு மிகச் சிறந்த தானியமாகும். எனவே சந்தையில் அதிக வரவேற்கப்படும் இந்த கம்பினை விவசாயிகள் பயிரிடுவதால் அதிக லாபம் பெறலாம்.

**பருவ காலங்கள்**

கோ (சியு) 9, கோ 10 ரகம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் வீரிய ஒட்டு கம்பு கோ (சியு) 9 ஆகியவை ஜுன், ஜுலை மாதங்களில் பயிரிடுவதற்கு ஏற்றதாகும். மேலும் இந்த ரகங்கள் மானாவரியில் ஆடிப் பட்டம், புரட்டாசி பட்டம், இறைவையில் மாசிப் பட்டம், சித்திரைப் பட்டங்களிலும் பயிரிடலாம்.

**விதையளவு**

ஒரு ஏக்கருக்கு 5 கிலோ விதைதேவைப்படும். விதைப்பு முறையைப் பொறுத்து விதை அளவு மாறுபடும். சால் விதைப்பு பரவலாக நடைமுறையில் உள்ளது.

**கம்பு சாகுபடி முறைகள் விதைநேர்த்தி**


ஒரு கிலோ விதையுடன் மெட்டலாக்சில் 6 கிராம் என்ற விகிதத்தில் விதைப்பதற்கு 24 மணி நேரத்துக்கு முன்னதாக விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதைப்பதற்கு சற்று முன்பு அசோஸ்பைரில்லம் கலந்து பின்பு விதைக்க வேண்டும். விதைப்பு வரிசைக்கு வரிசை 45 செ.மீட்டர் இடைவெளியும், செடிக்கு செடி 15 செ. மீட்டர் இடைவெளியும் விட வேண்டும்.

**கம்பு சாகுபடி முறைகள் உர அளவு**

ஏக்கருக்கு 5 டன் தொழுவுரம் அல்லது மட்கிய உரம் மட்கிய நார் உரம் உழுவதற்கு முன் இடவேண்டும். மண் பரிசோதனையின் பரிந்துரைப்படி NPK உரங்களை அளிக்கலாம். மண்பரிசோதனை செய்யவில்லையென்றால் அனைத்து வகையான தழைச்சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்து/மானாவாரியில், (ஒரு ஏக்கருக்கு), தழைச் சத்து 40 கிலோ, மணிச்சத்து 20 கிலோ, அனைத்தும் அடியுரமாக இடவேண்டும். மானாவாரி பயிர்களுக்கு அசோஸ் பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியம் அல்லது அசோபாஸை பரிந்துரைக்கப்பட்ட அளவில் 75 சதவீத தழைச்சத்து மற்றும் மணிச்சத்தினை சேர்த்து இட வேண்டும்.

**நுண்ணூட்டச்சத்து கலவையின் பயன்பாடு**

வேளாண்மை துறை வழிகாட்டுதல் படி ஒரு ஏக்கருக்கு 5 கிலோ நுண்ணூட்டக்க லவையை அளிக்கலாம். நுண்ணூட்டக் கலவையை போதுமான மண் கொண்டு 50 கிலோவாக செய்து கொள்ள வேண்டும். பிறகு விதைப்பதற்கு முன் / பின்பு விதைகளை மூடும் விதமாக நுண்ணூட்டக் கலவை அளிக்க வேண்டும். நுண்ணூட்டக் கலவை கிடைக்கவில்லையென்றால் 10 கிலோ துத்தநாக சல்பேட்டு ஒரு ஹெக்டேருக்கு அளிக்க வேண்டும். மேலே கூறியவற்றை போதுமான மண் கொண்டு 50 கிலோவாக கலந்து அளிக்க வேண்டும்.




**பயிர் களைப்பு**

கம்பு விதைத்த 2-வது வாரத்தில் களையெடுக்கும் சமயத்தில் பயிருக்குப் பயிர் 15 செ.மீட்டர் இடைவெளி இருப்பது போல் களை எடுக்க வேண்டும். பொதுவாக 15-வது, 30-வது நாளில் களை எ டுக்க வேண்டும். 7 முதல் 10 நாள்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

**கம்பு சாகுபடி முறைகள் பயிர் பாதுகாப்பு**

குருத்து ஈக்களை கட்டுப்படுத்த 5% வேப்பங்கொட்டைச்சாறு தெளிக்க வேண்டும்.

### கதிர்நாவாய் பூச்சி

கதிர்நாவாய் பூச்சிக்களின் தாக்குதலில் இருந்து பாதுகாக்க 25 கிலோ கார்பரில், 5 சதவீத மாலத்தியான் ஆகியவற்றை பூவெடுக்கும் சமயத்தில் தூவவேண்டும்.

### அடிச்சாம்பல் நோய்

அடிச்சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 500 கிராம் மெட்டாலாக்சில்லை அல்லது 1 கிலோ மேன்கோ செப் தெளிக்க வேண்டும்.

### துருநோய்

துருநோயைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு நனையும் கந்தகம் 2.5 கிலோ அல்லது மேன்கோசெப் 1 கிலோ தெளிக்க வேண்டும். தேவைப்பட்டால் 10 தினங்களுக்கு ஒரு முறை தெளிக்க வேண்டும்.




### அறுவடை

இலைகள் மஞ்சள் நிறமாக மாறி காய்ந்த தோற்றத்தைத் தரும். தானியங்கள் கடினமாகும். அப்போது கதிர்களை தனியாக அறுவடை செய்ய வேண்டும். கடைசியாக வெளிவந்த தூர்களி லிருந்து அறுவடைசெய்த கதிரை விதை உற்பத்திக்கு எடுத்துக் கொள்ளுதல் கூடாது. ஒரு வாரம் கழித்து தட்டையை வெட்டி நன்கு காய வைத்து பின்னர் சேமித்து வைக்க வேண்டும்.

இந்த முறையில் கம்பை பயிரிட்டால் விவசாயிகள் நல்ல லாபம் பெறலாம். தானியத்தை உலர விட்டு 100 கிலோ தானியத்திற்கு 1 கிலோ வீதம் வெண்களிமண் கலப்பதால் அரிசி அந்துப்பூச்சி தாக்குதலை குறைக்கலாம், சேமிப்பு கிடங்குகளில் வைக்கப் பட்டுள்ள பைகளின் மீது மாலத்தியான் 50 ECயை 10 மி.லி/ லிட்டருக்கு கொண்டு 100 சதுர மீட்டருக்கு 3 லிட்டர் வீதம் தெளிக்க வேண்டும். 10% குறைவான ஈரப்பதம் உள்ளவாறு தானியங்களை உலர விட்டு பிறகு சாக்கு பைகளில் சேமிக்க வேண்டும்.

தொடர்புக்கு தொலைபேசி எண்: 04142-213010

# சிவப்புக் கூன்வண்டின் தாக்குதலை ஆரம்ப நிலையில் கண்டறிய உதவும் அறிகுறிகள்!

1. மஞ்சள் நிறத்துடன் உள் மற்றும் நடு இலையடுக்களில் உள்ள இலைகள் வாடியது போன்று காணப்படும்.
2. மட்டைகளின் அடிப்பாகத்தில் நீள வெடிப்புகள் காணப்படும்.
3. இளம் மரங்களின் நுனிப்பகுதி அழுகி ஒருவித துர்வாடை வீசும்.
4. தண்டு மற்றும் மரத்தின் அடிப்பாகத்தில் துவாரங்கள் காணப்படும்.



5. துவாரங்களின் வழியாக கூன் வண்டின் இளம் புழுக்கள் தின்று துப்பும் தென்னை நார்கள் வெளிப்படும்.

6. துவாரங்களிலிருந்து பழுப்பு நிறத்திரவம் வெளிவரும்.

7.கூர்ந்து கேட்டால் சிவப்பு கூன்வண்டின் இளம்புழுக்கள் தென்னை மரத்தின் தண்டுப்பகுதியை தின்னும் பொழுது ஏற்படுத்தும் சப்தத்தினை கேட்க முடியும்.

8. மரத்தின் அடியிலும் மட்டையின் அடியிலும் கூட்டுப் புழுவின் கூடு அல்லது முழு வளர்ச்சியடைந்த வண்டு அல்லது தின்னப்பட்ட நார்கள் ஆகியவை காணப்படும்.

## மேலாண்மை முறைகள்

தோப்புகளில் இடி விழுந்து பராமரிப்பு இல்லாமல் காய்ந்து போன மரங்களை வேரோடு அப்புறப்படுத்தி அழிக்க வேண்டும். மரங்களில் காயம் எதுவும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். தண்டுப் பகுதியில் துளைகள் இருப்பின் அவற்றினை சிமெண்ட் கலவை கொண்டு பூச வேண்டும். பச்சை மட்டைகள் வெட்டுவதைத் தவிர்க்க வேண்டும். அப்படி வெட்டுவதாயின் தண்டிலிருந்து 120 செ.மீ தள்ளி வெட்ட வேண்டும். நுனி, நடுக்குருத்து மற்றும் மட்டை இடுக்குகளில் வேப்பங்கொட்டை தூள் மணல் (1:2) கலந்த கலவையை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வைப்பதினால் காண்டாமிருக வண்டு தாக்கிய இடங்களில் சிவப்பு கூன்வண்டு முட்டையிடுவதைத் தடுக்கலாம். இரண்டு எக்டேருக்கு ஒரு இனக்கவர்ச்சிப் பொறியினை பெர்ரோலியூர் வைத்து கூன்வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம்.

கரும்பு மொலாசஸ் 2 கிலோ, ஈஸ்ட் 5 கிராம், அசிடிக் அமிலம் 5 மிலி போன்றவற்றுடன் நீளவாக்கில் வெட்டப்பட்ட இளம் மட்டைத் துண்டுகள் போடப்பட்ட பானைகளை ஏக்கருக்கு 30 வீதம் தோப்பில் வைத்து வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம்.

குருத்தழுகல், இலையழுகல் மற்றும் காண்டாமிருகவண்டுகளால் தாக்கப்பட்ட மரங்கள் அதிகம் தாக்குதலுக்கு உள்ளாவதால் அந்த மரங்களை முதலில் பூஞ்சாணக்கொல்லி மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தி பாதுகாக்க வேண்டும். குளோரான்ட் ரானிலிப்ரோல் (6 மில்லி மருந்து, 10 மில்லி நீர் என கலந்து திசுக்களின் உள்ளே ஊடுருவிச் செயலாற்றக்கூடிய) வேர்கள் மூலம் 45 நாட்கள் இடைவெளியில் 2 அல்லது 3 தடவை உட்செலுத்தி புழுக்களை அழிக்க முடியும்.

துவாரங்கள் வழியாக வெளியே வந்து விட்ட கூன்வண்டு மட்டை இடுக்குகளில் மறைந்து வாழ்கின்றன. இளம் மரங்களில் காணப்படும் முதிர்ந்த ஓலைகளையும், காய்ந்த பண்ணாடைகளையும் அகற்றி கொண்டை பகுதியினை சுத்தமாக வைத்திருப்பதின் மூலம் கூன்வண்டுகளை பிடித்து அழிக்க முடியும் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேலு தெரிவித்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வேளாண் கல்லூரி மாணவர்களின் நாட்டு நல பணித் திட்ட முகாமில் வேளாண் மற்றும் சமூக நல மேம்பாட்டிற்காக செயல்பாடுகள்



மதுரை, ஆக.20

மதுரை, வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், இணைந்து நடத்திய நாட்டு நல பணித்திட்ட சிறப்பு முகாம் மதுரை மாவட்டம், வல்லாளப்பட்டி பேரூராட்சியில், ஆகஸ்ட் 8 முதல் 14 வரை நடைபெற்றது. இளங்கலை இரண்டாம் ஆண்டு வேளாண்மை மற்றும் சமுதாய அறிவியல் கல்லூரி மாணவ மாணவிகள் சுமார் 225 பேர் முகாமில் பங்கேற்றனர். துவக்க விழாவில் வேளாண்மை கல்லூரி முதன்மையர் முனைவர் பே ப மகேந்திரன் தலைமை உரை ஆற்ற, சமுதாய அறிவியல் கல்லூரி முதன்மையர் முனைவர் காஞ்சனா சிறப்புரை ஆற்ற, வல்லாளப்பட்டி பேரூராட்சியின் தலைவர் ரா.குமரன், முன்னிலை வகிக்க மற்றும் இப்பேரூராட்சியின் வார்டு கவுன்சிலர்களான ரஹ்மத்துல்லா, ஜெயமூர்த்தி வாழ்த்துரை வழங்க விழா இனிதே துவங்கியது. நாட்டு நல பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் ந.ரேவதி மற்றும் முனைவர் ந.ஆனந்தி, முறையே வரவேற்புரையும் நன்றியுரை நிகழ்த்தினார்.

கல்லூரியின் மாணவர் மன்ற ஆலோசகர் முனைவர் கி ராமகிருஷ்ணன், மாணவ மணிகளுக்கு நாட்டு நல பணித் திட்டத்தின் முக்கியத்துவத்தையும் மாணவர்கள் விவசாய மற்றும் கிராமப்புற மக்களை எவ்வாறு அணுக வேண்டும் என்று கூறி வாழ்த்துரை வழங்கினார்.

துவக்க நாளான்று நாட்டு நல பணித்திட்ட மாணவர்கள் அக்கிராமத்தின் சமூக பொருளாதார வளம் அறிய கணக்கெடுப்பை மேற்கொண்டனர். தொடர்ந்து ஒவ்வொரு நாளும் சில முக்கிய களப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதில் குறிப்பாக சுற்றுப்புற சூழல் மேம்பாடு மண் பரிசோதனை மண்புழு உரம் தயாரித்தல் காளான் வளர்ப்பு ஊட்டச்சத்து மற்றும் உடல்நலம் பேணுதல் உணவுப் பொருட்கள் மதிப்பு கூட்டுதல் மற்றும் பாதுகாத்தல் இளைஞர் நலம் மற்றும் பெண்கள் மேம்பாடு வேளாண் கல்வி முக்கியத்துவம் உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்கள் மற்றும் நெகிழி பொருட்கள் பயன்படுத்தாமல் இருத்தல் உள்ளடக்கிய களப்பணிகளில் சிறப்பு அழைப்பாளர்களின் சிறப்புரையும் மாணவர்களின் செயல்முறை விளக்கங்களும் அ வல்லாளப்பட்டி கிராம மக்கள் பயன்பெறும் வகையில் வேளாண் மற்றும் சமூகநல மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்பட்டன.

இந்த முகாமின் சிறப்பு அம்சங்கள் ஆன பசுமை கிராமம் என்ற அடிப்படையில் நாட்டு நல பணி திட்டம் மாணவர்கள் மக்களுக்கு மரக்கன்றுகள் நட்டு மற்றும் மரம் வளர்ப்பின் உபயோகத்தை பற்றியும் எடுத்துக் கூறி விரிவான பேரணியும் நடத்தினர்.

திண்டுக்கல் மாவட்ட வனத்துறை அலுவலர் பி எம் ராஜ்குமார், மரம் நடுதல் மற்றும் காடுகளின் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தினார். மேலும், பொது மருத்துவம் முகாம் மற்றும் கண் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டதில் சுமார் 200க்கும் மேற்பட்ட கிராம பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

தொடர்ச்சியாக கால்நடை மருத்துவர் டாக்டர் பவித்ரா மேற்பார்வையில் கால்நடை மருத்துவ சிகிச்சை முகாம் நடைபெற்றது. இதில் கால்நடைகளுக்கு பொது மருத்துவ சிகிச்சையும் அம்மை தடுப்பூசியும் அளிக்கப்பட்டது. மேலும் வல்லாளப்பட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு தலைமை ஆசிரியர் வினோத் தலைமையில் நாட்டு நல பணித்திட்ட மாணவர்கள் உயர்கல்வி வழிகாட்டுதலை சிறப்புர எடுத்துரைத்தனர். முகாமின் நிறைவு நாளான 14ம் தேதி இரு கல்லூரியின் முதன்மையர்கள் முன்னிலையில் இளைஞர் களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் முதுநிலை வழக்கறிஞர் கே சாமிதுரை விளக்கவுரை அளித்து மாணவர் களுக்கு சிறப்பான வழிகாட்டுதலை வழங்கினார். மேலும் போதைப் பொருள் தடுப்பு பற்றிய செய்தியை மேலூர் துணை காவல் கண்காணிப்பாளர் எஸ் வேல்முருகன் மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

# இப்கோ நானோ உரங்கள் மாதிரி கிராமத் திட்டம் – ஓர் பார்வை

நானோ உரங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் இப்கோ நானோ உரங்கள் மாதிரி கிராமத் திட்டத்தை தொடங்கி உள்ளது. இத்திட்டத்தை இப்கோ மேலாண்மை இயக்குநர் டாக்டர் U.S.அவஸ்தி, விற்பனை இயக்குநர் யோகேந்திர குமாரால் ஜூலை 01, 2024 அன்று காணொளி மூலம் நாடு முழுவதும் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 200 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் மாதிரி கிராமங்களில் உள்ள விவசாயி களுக்கு நானோ யூரியா, நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா திரவ உரங்கள் 25% மானிய விலையில் வழங்கப்படும். மேலும், நானோ உரங்களை இப்கோ ட்ரோன் மூலம் தெளிப்பதற்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 300 மட்டுமே. நானோ உரங்களுடன் பிற வேளாண் பூச்சிக்கொல்லி மருந்து களும் கலந்து தெளிக்கலாம்.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 10 மாவட்டங்களில் சுமார் 20,000 ஏக்கர் பரப்பளவு வரை நானோ உரங்களை விவசாயிகள் மானிய விலையில் தெளித்து பயன் பெறலாம். தமிழகத்தில் திருவள்ளூர், திருவண்ணாமலை, இராணிப் பேட்டை, ஈரோடு, தர்மபுரி, கோவை, கள்ளக்குறிச்சி,சேலம், தஞ்சாவூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் இப்கோ நானோ உரங்கள் மாதிரி கிராம திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

- ADVT.




# அலங்காநல்லூர் வட்டாரத்தில் மானாவாரி மேம்பாட்டுத் திட்டம் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, ஆக.20

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்தில் சரந்தாங்கி கிராமத்தில் மானாவாரி மேம்பாட்டுத் திட்டம் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 19.8.24ம் தேதி அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் இரா.பாண்டி ஒருங்கிணைந்த பண்ணைய திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணையத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து பேசி அனைவரையும் வரவேற்றார்.

அலங்காநல்லூர் வட்டார வேளாண்மை அலுவலர் மு.வசந்தகுமார் மத்திய மாநில திட்டங்கள், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம், பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், நுண்ணீர்ப் பாசன திட்டம், தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுதல் திட்டம் குறித்து விவசாயகளிடம் எடுத்துக் கூறினார்.

அலங்காநல்லூர் வட்டார துணை வேளாண்மை அலுவலர் பாலாமணி, இயற்கை வேளாண்மை முறைகள் பற்றியும் அதற்கு வழங்கப்படும் மானியத் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். ஓய்வு பெற்ற வேளாண்மை இணை இயக்குநர் சுருளிமலை, பேசுகையில் மானாவாரி ஒருங்கிணைந்த பண்ணைய திட்டத்தில் ஆடு, மாடு, கோழி வளர்ப்பு, சில்பாலின் மண்புழு உரம் தயாரிப்பு, தேனீ பெட்டி வளர்ப்பு முறைகள் பழக்கன்று செடிகள் வளர்ப்பு முறைகள் ஆகியவை சேர்த்து 1 எக்டருக்கு மானியமாக ரூ.30000/- வழங்கப்படுகிறது எனவும் வேளாண்மையுடன் கால்நடைகளை வளர்க்கும் போது வருடம் மழுவதும் கூடுதல் வருவாயினையும் குடும்பத்தினர் அனைவருக்கும் வேலை வாயப்பினை பெறுவது மட்டுமின்றி கால்நடைகளிலிருந்து கிடைக்கும் கழிவுகள் மண்புழு உர உற்பத்திக்கும் நிலத்திற்கு உரமாகப் பயன்படுவதால் உரச்செலவும் குறைகிறது. இதனால் பயிர்களிலிருந்து கூடுதல் மகசூல் கிடைக்கிறது. மேலும் மண்ணின் வளம் அதிகமாக பாதுகாக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த பண்ணையத்தில் கால்நடைக் கழிவுகளைக் கொண்டு பஞ்சகாவ்யத்தை தயாரித்து பசுந்தீவனம் மற்றும் வேளாண் பயிர்களுக்கு நோய்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தவும் வளர்ச்சி ஊக்கியாகவும் பயன்படுத்தலாம்.

இதன் மூலம் இரசாயணமில்லா இயற்கை அங்கக வேளாண் வழிப்பொருட்களை உற்பத்தி செய்ய முடியும் எனவும் தேனீ வளர்ப்பு மூலம் வீட்டிற்கு தேவையான தேன் கிடைக்கும் எனவும் கூடுதலாக கிடைத்தால் விற்பனை செய்து கூடுதல் வருமானம் பெறலாம் எனவும் அதில் உள்ள பொருட்கள் மருத்துவ பொருளாகவும் பயன்படுகிறது என ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பது அவசியம் என எடுத்துக் கூறி தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் உதவி வேளாண்மை அலுவலர் தி.ஈஸ்வரன் இயற்கை திரவ உயிர் உரங்களான திரவ




அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா ரைசோபியம் ஆகிய வற்றினை பயன்படுத்தி அதிக மகசூல் பெற்றிடலாம் எனவும் வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்படும் மானியத் திட்டங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். இப்பயிற்சியில் உதவி வேளாண்மை அலுவலர்கள் காதர் மொய்தீன் மற்றும் இந்திரஜித் கலந்து கொண்டனர்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உரையாற்றிய அலுவலர்களுக்கும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் வேல்முருகன் நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் வசந்தி, சௌந்தராஜன் ஆகியோர் செய்திருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# புங்கம் பிண்ணாக்கின் பயன்கள்!

புங்கம் பிண்ணாக்கிலுள்ள உரச்சத்துக்களாவன:

நைட்ரஜன் 5.1%, பாஸ்பரஸ் 1.1%, பொட்டாஷ் 1.3%, சோடியம் ஆக்ஸைடு -0.8%.

கரும்புப் பயிருக்கு பிண்ணாக்கை சிறப்பு உரமாக உபயோகிக்கலாம். அதனால் சிறப்பு எறும்புகளின் தொல்லையும் இருக்காது.

அனைத்துப் பயிர்களுக்கும் 50-60 கிலோ புங்கம் பிண்ணாக்கை வயலில் இடலாம்.

காப்பி செடிகளுக்கும். தக்காளிக்கும் புங்கம் பிண்ணாக்கை உரமிட்டால், நூற்புழுக்களின் - குறிப்பாக வேர் முடிச்சுகளை ஏற்படுத்தும் இனத்தின் தாக்கம் குறையும்.

யூரியா, அம்மோனியம் சல்பேட் ஆகியவற்றுடன் பிண்ணாக்கையும் கலந்து உரமிட்டால், இந்த உரங்கள் நைட்ரேட்டாக மாறாமல், அம்மோனிய சத்தாக நீண்ட நாட்கள் நிலைக்கும். இதன் காரணமாக நஞ்சைப் பயிருக்கு உரமிட ஏற்றதாகும்.

யூரியா உரத்தை அம்மோனிய உரமாக மாற்றும் யூரியேஸ் (Urease) என்ற என்ஸைம். பிண்ணாக்கில் உள்ளது. அதிகமாக நீர் வடியும் இடங்களில், பிண்ணாக்குடன் யூரியாவை கலந்து உரமிட்டால் உரச்சத்து வீணாவது குறையும்.

பிண்ணாக்கிலுள்ள புரதப்பகுதியை சோடியம் கார்பனேட் மூலம் தனித்துப் பிரித்து, ஒட்டுப்படை தயாரிக்கலாம். இப்பசையை பூச்சிக்கொல்லி இரசாயனங்களுடன் கலந்து தெளித்தால் பூச்சிக்கொல்லி நன்கு செடிகளில் பரவி ஒட்டிக்கொள்ளும், இதனால் பூச்சிக்கொல்லியி திறனும் அதிகரிக்கிறது. என்று சேலம் மாவட்டம் காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

சிவகங்கை, ஆக.20

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டார வேளாண்மைத்துறை சார்பாக பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஆளவிலாம்பட்டி கிராமத்தில் பயிற்சி நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர் பொ.இரத்தினகுமார் இப்பயிற்சியினை தலைமை வகித்து அங்கக பண்ணைகளின் தேவை மற்றும் உயிர்ம வேளாண்மையின் நன்மைகள் அதன் முக்கியத்துவம் குறித்தும், பாரம்பரிய நெல் இரகங்கள் பற்றி மக்களிடையே உள்ள விழிப்புணர்வு மற்றும் தேவைகள் குறித்தும், தங்களின் விளை பொருட்களை சிறந்த முறையில்

வணிகம் செய்யும் வழிமுறைகளை எடுத்துக் கூறினார். பின்பு விதைச்சான்று மற்றும் உயிர்மசான்றளிப்பு ஆய்வாளர் ம.சரஸ்வதி, பல தானிய விதைப்பு, பசுந்தாள் உரங்கள் மற்றும் மண்ணின் அங்கக கரிமத்தை அதிகரிக்க வழிமுறைகளையும், பங்கேற்பாளர் உறுதியளிப்பு முறை குறித்தும் எடுத்துக் கூறினார். துணை வேளாண்மை அலுவலர் பாஸ்கரன், இத்திட்டத்தின் நோக்கம் மற்றும் வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள நெல் இரகங்கள் மற்றும் இடுபொருட்கள் குறித்தும் செயல்பட்டு வரும் மாநிலத் திட்டங்கள் மற்றும் மத்தியத் திட்டங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் சௌமியா நன்றியுரை கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் தொகுப்பு ஒருங்கிணைப்பாளர் லாரா செய்திருந்தனர்.

